DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 192/2024 |
| Deposition of Witness for | : | P.W.11 |
| Name | : | **சுப்பிரமணியன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர். 3 -ம் எதிரி ஆஜர் இல்லை. 3 ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 11.11.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக சென்னை சேலையூர் காவல்நிலையத்தில் பணிஓய்வு பெற்று தற்போது சென்னை குரோம்பேட்டையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு 14.08.2021ம் தேதி நான் தேவகோட்டை தாலுகா வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 07.30 மணியளவில் தேவகோட்டை வட்டத்திற்கு உட்பட்ட திருவேகம்பத்தூர் சார்பு ஆய்வாளர் மகாராஜா அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது சிவகங்கை அரசு

மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்து வரபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஆலம்பகோட்டை கிராமத்தை சேர்ந்த ஆறுமுகம் மகன் துரைப்பாண்டிகொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று 07.00 நிலையம் வந்து திருவேகம்பத்தூர் காவல்நிலைய குற்ற எண் 173/2021 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 307, 506(ii) இதச மற்றும் 4 of TNPWH Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த **முதல் தகவல்அறிக்கை அ.த.சா.ஆ- 6** ஆகும். வாதியின் புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கை அசலையும் இணைத்து தேவகோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

2. வழக்கு கோப்பினை எனது பார்வைக்கு வைத்திருந்ததை நான் பார்வையிட்டு எனது விசாரணைக்கு எடுத்துகொண்டு 14.08.2021ம் காலை 8.30 மணிக்கு சம்பவ இடமான ஆலம்பகோட்டைகிராமம் சென்று வாதி துரைபாண்டி வீட்டின் முன்பாக சென்று சாட்சிகள் பஞ்சவர்ணம், கருப்பையா ஆகியோர் முன்பு சம்பவ இடங்களை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.த.சா.ஆ- 7** ஆகும். அந்த **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ. 8** ஆகும்.

3. சம்பவ இடத்தில் சாட்சிகளை விசாரணை செய்துகொண்டிருந்த போது 1வது எதிரி அர்சுணன் என்பவர் உருவாட்டி பேருந்து நிலையத்தில் இருப்பதாக தகவல் கிடைக்க காலை 10.00 மணிக்கு 14.08.2021 அன்று அங்கு சென்று எதிரி அர்சுணன் என்பவரை கைது செய்தபோது தனக்கு நெஞ்சுவலி இருப்பதாக கூற அவரை முதலில் காளையார்கோவில் மருத்துவமனைக்கு அழைத்து சென்று பின் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று பரிசோதனைக்கு அனுப்பபட்டது. அதே நேரத்தில் சிவகங்கை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த துரைபாண்டி மற்றும் இந்து மதி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. இருவரின் விபத்து பதிவேடுகளை பெற்று மருத்துவர் திரு. சூரியநாராயணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரி அர்சுணன் அவர்களுக்கு உடல் நிலை சரியாக இருப்பதாக மருத்துவர்கள் கூறியதன் படி அன்றைய தினம் திருவேகம்பத்தூர் காவல்நிலையம் அழைத்துவந்து 14.30 மணியளவில் சாட்சிகள் வேலு மற்றும் ராபர்ட் கென்னடி ஆகியோர் முன்னிலையில் விசாரணை செய்ய எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அப்போது அவர் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்தில் பயன்படுத்திய அருவாளை அடையாளம் காட்டி எடுத்து தருவதாக கூறினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ. 9 ஆகும்.

5.அவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறிய படி அவருடன் 14.08.2021ம் தேதி மாலை 16.00 மணிக்கு உருவாட்டி பாலத்தின் கீழ் உள்ள முற்புதர் அருகில் இருந்து இரும்பு கைபிடியுடன் கூடிய அருவாள் ஒன்று மொத்த நீளம் 46 செ.மீ. கைப்பிடி நீளம் 15 செ.மீ. அருவாள் நீளம் 31 செ.மீ. எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் வேலு மற்றும் கென்னடி முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அருவாளை கைப்பற்றினேன். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 10** ஆகும். சாட்சிகள் அமுதா, கிருஷ்ணன், மீனாள் , மணிமேகலை , கருப்பையா , பஞ்சவர்ணம் , வேலு , ராபர்ட் கென்னடி , சார்பு ஆய்வாளர் மகாராஜா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6.பின்னர் எதிரியை முறைப்படி நீதிமன்ற அடைப்பு காவல் அறிக்கையுடன் மற்றும் படிவம் 91 மூலம் வழக்கு சொத்துடன் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தேவகோட்டையில் ஆஜர் படுத்தினேன். அந்த **படிவம் 91 அ.த.சா.ஆ. 11** ஆகும். மற்ற எதிரிகளான அஸ்வினி மற்றும் தாரணி ஆகியோர் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. 14.05.2022ம் தேதி சிவகங்கை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சென்று இவ்வழக்கில் காயம் பட்ட துரைபாண்டி , இந்து மதி ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சூரியநாராயணன் அவர்களிடம் காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம்

பதிவு செய்தேன்.அதில் துரைபாண்டிக்கு சாதராண காயம் என்றும் இந்து மதிக்கு கொடுங்காயம் என்றும் சான்று வழங்கினார். அன்றைய தினமே காயத்தின் தன்மைக்கு ஏற்ப இவ்வழக்கின் சட்டப்பிரிவை 294(பி), 323, 324, 307, 506(ii) இதச மற்றும் 4 of TNPWH Act ன் படி இருந்ததைசட்டப்பிரிவை 294(பி), 324, 326, 307, 506(ii) இதச r/w 34 A மற்றும் 4 of TNPWH Act ன் படி பிரிவு மாறுதல் அறிக்கை தயார்செய்து அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 1வது எதிரி அர்சுணன் மீது 294(பி), 324,326, 307, 506(ii) இதச மற்றும் 4 of TNPWH Act ன் படியும் 2 வது எதிரி அஸ்வினி மீது பிரிவு 324 உ/இ 34 இதச வின் படியும் 3 வது எதிரி தாரணி மீது பிரிவு 324 உ/இ 34 இதச வின்படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல்செய்தேன்.

அ.சா..3, அ.சா..4, அ.சா.6, அ.சா.7, அ.சா.8 மற்றும் அ.சா.9 ஆகியோர்கள் இவ்வழக்கு சம்பவ சங்கதிகள் பற்றி அவர்களது வாக்குமூலங்களில் உள்ளவாறு தான்சொல்லியுள்ளனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** :

1.நான் எங்கு இருக்கும் போது எத்தனை மணிக்கு தகவல் இந்த வழக்கு சம்பந்தமாக கொடுக்கப்பட்டது என்றால் 14.08.2021 அன்று காலை 07.30 மணியளவில் சருகனியில் ஜீப்பில் வந்துகொண்டிருக்கும்போது தகவல் கிடைத்தது. வழக்கு சம்பந்தமான முதல் தகவல் அறிக்கை எப்போது கிடைக்க பெற்றதுஎன்றால் அன்றைய தினம் காலை 7.45 மணியளவில் கிடைத்தது. முதல் தகவல் அறிக்கை சார்பு ஆய்வாளர் மகாராஜன் என்பவரால் காலை 7.00 மணியளவில் பதிவு செய்ததாக கண்டிருந்தது என்றால் சரிதான்.

2.சார்பு ஆய்வாளர் மகாராஜன் சிவகங்கை அரசு மருத்துவமனையில் இருந்து காவல்நிலையத்திற்கு தகவல் எத்தணை மணிக்கு கொடுக்கப்பட்டது என்று நேரம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் மகாராஜன் எத்தனை மணிக்கு காவல்நிலையத்தில் இருந்து மருத்துவமனைக்கு சென்றால் என்று நேரம் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால்

சரிதான். சார்பு ஆய்வாளர் மகாராஜன்மருத்துமனையில் காலை 7.00 க்கு வாக்குமூலம் பெற்ற தாக குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தவறு. ஆனால் மகாராஜன் 14.08.2021ம் தேதி அதிகாலை 03.00 மணிக்கு சென்று 05.00 மணிக்கு வாக்குமூலம் வாங்கியுள்ளார். இந்த விபரம் என் வழக்கு கோப்பிலும் புலன் விசாரணையிலும் எந்த இடத்திலும் குறிப்பிட படவில்லை என்றால் சரிதான். நான் இந்த விபரத்தை கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் அறிவேன் சாட்சியாக புஷ்பம் என்பவர் சாட்சி கையொப்பம்போட்டுள்ளார். மேற்படி புஷ்பம் எந்த ஊரை சேர்ந்தவர் அவர் யார் என்ற விபரம் விசாரித்து அறியவில்லை என்றால் சரிதான்.

3.புகார் யாரால் எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. புகாரிலும் புலன் விசாரணையிலும் சம்வத்திற்கு என்ன காரணம் என்று குறிப்பிட்டு உள்ளார்களா என்றால் புகார் தாரர் மரம் ஏலம் எடுத்திருந்தார் என்றும் அந்த மரத்திற்கு பணம் கட்டததால் 1வது எதிரி சொல்லிதான் பணம் கட்ட தாசில் தார் வர அங்கு வந்த 1வது எதிரியை வாதி அங்கிருந்து செல்லசொல்கிறார். அதுதான் சம்பவத்திற்கு காரணம். மேற்படி விபரத்தை வழக்கு கோப்பில் யாராவது சாட்சி சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லவில்லை. புகாரிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை எனது குற்ற இறுதி அறிக்கையிலும் குறிப்பிட்டு' சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. 1வதுஎதிரி தலையாரியாக வேலை செய்கிறார் என்றால் சரிதான். தாசில் தார் 1வது எதிரிக்கு மேல் அதிகாரி என்றால் சரிதான். தாசில் தார் மேல் அதிகாரி என்ற முறையில் 1ம் எதிரி அவருக்கு மரியாதை செய்யும் வகையில் அன்றைய தினம் 1ம் எதிரி தாசில்தாருக்கு மரியாதை செய்துவிட்டு நின்றார் என்றால் சரிதான். அப்போது அ.சா.1 எதிரியை நீ இங்கு வரக்கூடாது என சொல்லியுள்ளார். அதன் பின்பு 1ம் எதிரி சென்றுவிட்டார் என்றால் சரிதான். தாசில் தாரை சந்தித்த நேரம் எனக்கு ஞுபாகமில்லை. அன்றைய இரவு இந்த வழக்கு சம்பவம் நடந்ததா என்பது பற்றி எனக்கு ஞுபாகமில்லை.

5. முதல் தகவல் அறிக்கை பெற்றவுடன் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றால் சரிதான். அவ்வாறு தயார் செய்த ஆவணத்தில் ரத்தக்கறை எதுவும் படிந்ததாக எதுவும் நான் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அன்றைய தினமே இரவு 1ம் எதிரி திருவேகம்பத்தூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றி எனக்குதெரியுமா என்றால் தெரியாது. 07.08.2021ம் தேதி என்மீது 1ம் எதிரி காவல் துணைகண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. காவல் துணைகண்காணிப்பாளரிடம் 1ம் எதிரி என்மீது மணல் கடத்தல் லாரி உரிமையாளருக்கு இருப்பதாக கூறி புகார் கொடுத்தார் என்றும் அதில் இருந்து 1ம் எதிரியை பழிவாங்குவதற்காக நான் முன்விரோதம் கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. TN 69 AX 5412 என்ற லாரி மீது நடவடிக்கை எடுக்கபடவில்லை என்றால் 5412 லாரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்குற்ற எண் எனக்கு ஞாபகமில்லை. நான் வழக்கு பதியவில்லை அதனால் தான் ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. 13.08.2021ம் தேதி 1ம் எதிரியை அ.சா.1 தாக்கியதாக எனது காவல் நிலையத்தில் அன்று இரவு புகார் கொடுத்தார் அப்போது 1ம் எதிரியை அன்று இரவில்இருந்து எங்கள் காவல்நிலையத்தில் சட்ட விரோதமாக வைத்திருந்தோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் புகாரை பெற்ற பின்பு அவரை பழிவாங்குவதற்காக நான் நேரடியாக ஆலம்பக்கோட்டையில் உள்ள அ.சா.1 வீட்டிற்கு சென்று அப்போது 1ம் எதிரியை தாக்குவதற்காக அ.சா.1 அவரது வீட்டில் அருவாளை எடுத்து வெட்ட போகும் போது அவரது மனைவியும் அங்கிருந்தவர்களும் அந்த ஆயுதத்தை பறித்ததால் அவருக்கும் அவரது மனைவிக்கும் காயம் ஏற்பட்டதாகவும் அதனால் அவர்கள் புகார் கொடுக்காமல் வீட்டிலே இருந்தார்கள் என்றும் நான் தான் அங்கு போய் எதிரியை பழிவாங்குவதற்காக அ.சா.1 மற்றும் அ.சா.2 யை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து அவரிடம் பொய்யாக ஒரு புகாரை

வாங்கி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. நான் சொல்வது போன்று 1ம் எதிரி உருவாட்டி கிராமத்தில் உள்ள பாலத்தில் நிற்கவில்லை என்றும் அங்கு வைத்து அவரை சாட்சிகள் முன்னிலையில் கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போன்று 1ம் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் சாட்சிகள் முன்னிலையில் கொடுக்கவில்லை என்றாலும் நான் ஒப்புதல் வாக்குமூலம் , அத்தாட்சி எங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் நான் சொல்வது போன்று சாட்சிகள் ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியிலோ கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. அ.சா.10 மருத்துவரை 14.08.2021 மற்றும் 14.05.2022 ஆகிய தேதிகளில் விசாரித்தேன்.அவருடைய வாக்குமூலத்தில் X- ray எடுத்ததாகவும் எலும்பு முறிவு இருந்ததாகவும் எனது விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஆயுதத்தை மருத்துவரிடம் காண்பித்து கருத்துரை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். மருத்துவர் சான்றின்படி இரவு 08.45 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தன்னை தெரிந்த ஒரு நபர் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

10. அ.சா.1 வீட்டில் சம்பவத்தின் போது குழந்தைகள் இருந்தாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. 1ம் எதிரியின் கடைசி மகள் தாக்கியதாக சொல்லியுள்ளார்கள் என்றும் கடைசி மகளுக்கு 10 வயது என்பதும் அவர் பெயர் ஆர்த்தி என்பதும் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் சா.பொ.1ல் ரத்தக்கறை எதுவும் இருந்ததா என்றால் நான் கைப்பற்றிய போது ரத்தக்கறை இல்லை. சா.பொ.1 எதிரிக்கு சொந்தமானது அல்ல என்றும் அ.சா1 அவர்களின் வீட்டில் இருந்து என்னிடம் ஆஜர் படுத்தியது என்று சொன்னால் சரியல்ல.

11. அந்த சான்றுபொருளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால்சரியல்ல. 1ம் எதிரியின் மனைவி இறந்ததற்கு காரணம்

அ.சா1 மற்றும் அவரது தாய் , தந்தை காரணம் என கூறி தேவகோட்டை உதவி அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண் 88/2011 என நடந்து அதில் சமரசம் ஆகி விடுதலை ஆன விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த ஊரில் எதிரி குடும்பம் தவிர அனைவரும் அ.சா.1 க்கு உறவினர்களா என்றால் சரிதான்.

12. அ.சா.1 சட்ட விரோதமாக அரசு சொந்தமான மணல் கடத்துதல் மற்றும் மரங்களை வெட்டி கடத்துவது வழக்கம் என்றும் அதற்கு திருவேகம்பத்தூர் காவல்நிலையத்தில் நெருங்கிய தொடர்புடையவர் என்றும் இது சம்பந்தமான சட்ட விரோத நடவடிக்கைகளை 1ம் எதிரி அவ்வப்போது மேல் அதிகாரிகளுக்கு தெரிவித்து வந்தார் என்றும் அதனால் முன்விரோதம் கொண்டிருந்த அ.சா.1 எதிரியை பழிவாங்க பொய்புகார் கொடுத்திருந்தார் என்றும் அதனை சரிவர புலன் விசாரணை செய்யாமல் நான் 1ம் எதிரிமீது உள்ள காழ்புணர்ச்சியின் காரணமாக 1ம் எதிரி மீதும் அவரது மகள் மீதும் தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. 2 மற்றும் 3 வது எதிரிகள் திருமணம் செய்து வெளியூர்களில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அ.சா. 1 மற்றும் அ,சா.2 ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் இந்த எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லைஎன்றாலும் எதிரிகளால் அ.சா. 1 மற்றும் அ,சா.2 ஆகியோர்களுக்கு காயம் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிரியை கைது செய்த போது நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை.

14. 1ம் எதிரிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரையும் நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போன்று சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் பெறபடவில்லை என்றாலும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதியபடவில்லை என்றாலும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சி நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தயார்செய்யபடவில்லை என்றும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில்

எதிரியை கைது செய்யவில்லை என்றும் அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் சான்று பொருளை 1ம் எதிரி ஆஜர் படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் முறையான புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான குற்ற அறிக்கை தாக்கல்செய்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15. அன்றைய தினம் 13.08.2021ம்தேதி அ.சா.1 துரைபாண்டி மது அருந்தி விட்டு 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்று 1ம் எதிரியை தகாத வார்த்தைகளால் கூறி கையால் தாக்கினார் என்றும் அது சம்பந்தமாக 1ம் எதிரி திருவேகம்பத்தூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் அந்த புகார் மீது நடவடிக்கை எடுக்காததால் உயர் அதிகாரிகளிடம் புகார் செய்யதார் என்றும் அதன் மீதும் நான் நடவடிக்கை எடுக்காது அ.சா.1 க்கு சாதகமாக நான் செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.11.11 21:20:48 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை..**